(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 152.]**

# பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரம்

## 2026 மே 22, வெள்ளிக்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

1186/2025

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் கிளி/ கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம் என்றதொரு தேசிய பாடசாலை உள்ளது என்பதையும்;

(ii) கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள இரண்டு தேசிய பாடசாலைகளுள் ஒன்றான மேற்படி பாடசாலையின் கல்வி நிலை தற்போது பின்னடைந்துள்ளது என்பதையும்;

(iii) மேற்படி பாடசாலையில் கல்விசார், கல்விசாரா ஊழியர்களின் வெற்றிடங்கள் மற்றும் தளபாடங்கள் உள்ளிட்ட வளங்களின் பற்றாக்குறை நிலவுகின்றது என்பதையும்;

(iv) அவ்வெற்றிடங்களை நிரப்பாமல் மாணவர்களின் கல்வி நிலையை மேம்படுத்த முடியாது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா;

(ஆ) (i) மேற்படி பாடசாலையில் தற்போது பணியாற்றும் அதிபர், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) அப்பாடசாலையின் கல்விசாரா ஊழியர்களின் ஆளணியில் நிலவும் வெற்றிடங்கள் இதுவரை நிரப்பப்படாமல் இருப்பதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி பாடசாலையில் நிலவும் அனைத்து வெற்றிடங்களும் முழுமையாக நிரப்பப்படும் திகதி யாதென்பதையும்;

(iv) மேற்படி பாடசாலையின் கட்டிடங்கள் மற்றும் தளபாடங்களின் தேவைகள் பூர்த்திசெய்யப்படும் காலப்பகுதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

1360/2025

கௌரவ துரைராசா ரவிகரன்,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முள்ளிக்குளம் பிரதேச மக்களுக்கு சொந்தமான காணிகள் 2007ஆம் ஆண்டு முதல் இராணுவத்தின் கீழ் காணப்படுவதால், அப்பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் இதுவரையில் தமது சொந்தக் கிராமங்களுக்குத் திரும்பிச் செல்ல முடியாமல் இருப்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி மக்கள் தமது வாழ்விடங்களில் மீள் குடியேற முடியாமல் இருப்பதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) குறிப்பிட்ட பிரதேசத்தில் இடம்பெயர்ந்துள்ள 300இற்கும் அதிகமான குடும்பங்களுக்கு முறையான வீட்டு வசதிகள், வாழ்வாதார வாய்ப்புகள் மற்றும் அடிப்படை வசதிகள் எதுவும் காணப்படாத நிலையில், அரசாங்கம் இந்த மக்களுக்கு இதுவரை வழங்கியுள்ள நிவாரணங்கள் யாவை என்பதையும்;

(iv) முள்ளிக்குளம் மக்களுக்கு சொந்தமான பாரம்பரிய காணிகள், வீடுகள், பாடசாலைகள் மற்றும் மத வழிபாட்டுத்தலங்கள் தற்போது கடற்படையின் கீழ் காணப்படுகின்றனவா என்பதையும்;

(v) ஆமெனில், இவற்றை விடுவித்து அவற்றை மக்களிடம் மீளக் கையளிப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(vi) மேற்படி இடம்பெயர்ந்துள்ள மக்களை அவர்களின் நிரந்தர வாழ்விடங்களில் மீள்குடியமர்த்துவதற்கான நிரந்தர திட்டம் அல்லது குறிப்பிட்ட காலவரையறை காணப்படுகின்றதா என்பதையும்;

(vii) ஆமெனில், மேற்படி செயன்முறையை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் காலப்பகுதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

1407/2025

கௌரவ (டாக்டர்) பத்மநாதன் சத்தியலிங்கம்,— வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வவுனியா பிரதேச செயலகத்தினால் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள, 2011ஆம் ஆண்டில் அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட வவுனியா மாவட்டத்தின் ஓமந்தை – வேப்பங்குளம் பிரதேசத்தில் 20 பேர்ச்சஸ் கொண்ட 125 காணித் துண்டுகளுக்கான அளிப்புப் பத்திரங்களை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை வழங்க வேண்டும் என்பதை அவர் அறிவாரா;

(ii) 14 வருடங்களுக்கு முன்னர் அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட அபிவிருத்தி செய்யப்படாத மேற்படி காணிகள், அபிவிருத்தி செய்யப்பட்டதன் பின்னர் தற்போதைய பெறுமதிக்கு ஏற்ப மதிப்பீடு செய்யப்பட்டுள்ளனவா;

(iii) ஆமெனில், மேற்படி காணிகளை வழங்கும் போது இருந்த பெறுமதியைக் கருத்தில் கொண்டு இச்சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்படுமா;

(iv) மீள்மதிப்பீடு செய்யப்படும் காலப்பகுதி யாது;

(v) மீள்மதிப்பீடு செய்ததன் பின்னர், சம்பந்தப்பட்ட குடியிருப்பாளர்களுக்கு காணி அளிப்புப் பத்திரங்களை வழங்கக் கூடிய காலப்பகுதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

1514/2025

கௌரவ ரொஷான் அக்மீமன,— துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2024 ஆம் ஆண்டு வரை திருகோணமலை துறைமுகத்தின் தொழிற்பாட்டு இலாபம்/ நட்டம் ஆண்டு வாரியாக வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) திருகோணமலை துறைமுகத்திற்குச் சொந்தமான இறங்குதுறைகள் அல்லது முனையங்கள் குத்தகை அடிப்படையில் அல்லது வேறு அடிப்படையில் பல்வேறு தனியார் கம்பனிகளுக்கு வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்தக் கம்பனிகள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி கம்பனிகளால் இலங்கை துறைமுக அதிகாரசபைக்குச் செலுத்த வேண்டிய வரி அல்லது வேறு கட்டணங்கள் முறையாக செலுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்;

(v) ஆமெனில், 2005 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை அந்த கொடுப்பனவுகள் பற்றிய தகவல்கள் ஆண்டு வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இன்றளவில் திருகோணமலை துறைமுகத்திற்குச் சொந்தமான முழுமையாக அல்லது பகுதியாக அரசாங்கத்திற்கு உரித்துடையதான இறங்குதுறைகள் அல்லது முனையங்கள் காணப்படுகின்றனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தகைய இறங்குதுறைகள் அல்லது முனையங்கள் யாவையென்பதையும்;

(iii) திருகோணமலை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பில் உள்ள திட்டங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

1547/2025

கௌரவ (கலாநிதி) நந்தன மில்லகல,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் கிராமியப் பிரதேசங்களில் பாதுகாப்பற்ற வகையில் மின் கம்பங்கள் மற்றும் மின் கம்பிகள் பொருத்தப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அது தொடர்பில் முறையான விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) குறைந்த இயலளவு கொண்ட மின் கம்பிக் கட்டமைப்புகளை விரிவுபடுத்துவதற்கு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

1643/2025

கௌரவ இம்ரான் மகரூப்,— வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்தில் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் குடிநீர் வழங்கப்பட்டுள்ள பிரதேசங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி மாவட்டத்தில் இன்றுவரை குடிநீர் வழங்கப்படாத பிரதேசங்கள் யாவை என்பதையும்;

(iii) குச்சவெளி, புடவைக்கட்டு, திரியாய் மற்றும் சலப்பையாறு ஆகிய பிரதேசங்களுக்கு குடிநீர் வழங்கப்படாமையினால், அங்கு வசிக்கும் 4,000 குடும்பங்கள் குடிநீரைப் பெறுவதில் சிரமங்களுக்கு முகம்கொடுத்துள்ளார்கள் என்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(iv) அப்பிரதேசங்களுக்கு உடனடியாக குடிநீர் வழங்குவதற்கான ஏதேனும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

1716/2025

கௌரவ ஆர். ஜீ. விஜேரத்ன,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் தேசியக் கணக்கீட்டுப் பிரிவில் கடமையாற்றிய அலுவலர் ஒருவரின் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி அலுவலரின் பெயர் யாது என்பதையும்;

(iii) குறித்த அலுவலருக்கான நீதி மற்றும் நியாயம் பெற்றுக் கொடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) பொருளாதாரம் பற்றிய மிகவும் கூருணர்வுமிக்கதான தரவுகள் திரிபுபடுத்தப்படுவதைத் தடுப்பதற்காக தற்போதைய அரசாங்கத்திடம் காணப்படுகின்ற வேலைத்திட்டம் யாது என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

8.

1757/2025

கௌரவ எம்.எஸ் அப்துல் வாசித்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2008/04 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் லாஹுகல பிரதேச செயலாளர் பிரிவில் விண்ணப்பித்த விவசாயிகளின் எண்ணிக்கை மற்றும் அவ்விண்ணப்பதாரர்களுள் பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவைச் சார்ந்த விவசாயிகளின் எண்ணிக்கை;

(ii) மேற்படி விவசாயிகளுக்கு வழங்கிய புதிய காணி அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை;

(iii) மேற்படி சுற்றுநிருபத்தின் பிரகாரம் லாஹுகல பிரதேச செயலகத்தால் கடந்த 17 வருடங்களில் வழங்கப்பட்ட மொத்த புதிய அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை;

(iv) மேற்படி சுற்றுநிருபத்தின் பிரகாரம் விண்ணப்பித்துள்ள போதும் இதுவரை வழங்கப்படாத அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை;

(v) கிழக்கு மாகாணத்தின் காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் பரிந்துரையின் பிரகாரம், லாஹுகல பிரதேச செயலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள போதும் இதுவரை வழங்கப்படாத அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை;

மேற்படி பிரதேச செயலாளர் பிரிவு வாரியாக வெவ்வேறாக யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி காணி அனுமதிப்பத்திரங்களை வழங்காமல் நிறுத்தி வைத்தமைக்கு ஏதுவாக அமைந்த காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி அனுமதிப்பத்திரங்களை தகுதி வாய்ந்த ஆட்களுக்கு துரிதமாக வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

9.

1908/2026

கௌரவ பீ. ஆரியவங்ஷ,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் குடம்புளி (கொரக்காய்) செய்கை மேற்கொள்ளும் காணியின் அளவு எவ்வளவென்பதையும்;

(ii) குடம்புளி விலை தொடர்ச்சியாக தளம்பல் நிலையில் காணப்படுவதன் காரணமாக செய்கையாளர்கள் பாதிக்கப்படுகின்றமையை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

1990/2026

கௌரவ திலிண சமரகோன்,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பண்டிகை காலத்தில் போதியளவு அரிசிக் கையிருப்புகளை சந்தைக்கு விடுவிக்கும் ஆற்றலுள்ளதா என்பதையும்;

(ii) அனைத்து அரிசி வகைகளின் கட்டுப்பாட்டு விலைகள், அரிசி வகைகளின் வாரியாக வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) வரையறுக்கப்பட்ட லங்கா சதொச நிறுவனம் மூலம் அரிசியை விநியோகிப்பதற்கு வகுக்கப்பட்டுள்ள வேலைத்திட்டம் யாதென்பதையும்;

(iv) இறக்குமதி செய்யப்பட்ட அரிசி வகைகள் யாவையென்பதையும்;

(v) மேற்படி அரிசி வகைகளின் நடப்பு விலைகள், அரிசி வகைகளின் வாரியாக வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நாட்டில் அத்தியாவசிய உணவுப்பொருட்கள் போதியளவு களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) மேற்படி உணவுப்பொருட்கள், தனியார் துறையால் மட்டும் இறக்குமதி செய்யப்படுகின்றனவா என்பதையும்;

(iii) இன்றேல், அரச துறை அதில் தலையீடு செய்யும் விதம் யாதென்பதையும்;

(iv) அரிசி மற்றும் ஏனைய அத்தியாவசிய உணவுப்பொருட்களின் விலைகளைக் கட்டுப்படுத்துவதில் நுகர்வோர் அலுவல்கள் பற்றிய அதிகாரசபை போதியளவு தலையீடு செய்கின்றதா என்பதையும்;

(v) மேற்படி அதிகாரசபை, விலைக் கட்டுப்பாட்டில் தலையீடுசெய்யும் விதம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## அனுதாபப் பிரேரணைகள்

1.
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் காலஞ்சென்ற கௌரவ (பேராசிரியர்) திஸ்ஸ விதாரண.

2.
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் காலஞ்சென்ற கௌரவ எஸ்.சீ. முதுகுமாரண.

3.
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் காலஞ்சென்ற கௌரவ சந்திரதாச கலப்பத்தி.

4.
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் காலஞ்சென்ற கௌரவ நந்தன குணதிலக.

5.
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் காலஞ்சென்ற கௌரவ ஜனக் மஹேந்திர அதிகாரி.

6.
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் காலஞ்சென்ற கௌரவ ரீ. கனகசபை.

---

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.
பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளின் கீழான தீர்மானம்,— மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம் தொடர்பாக 2025.03.10 மற்றும் 2025.03.21 ஆகிய திகதிகளில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் குறித்த விடயங்களை உள்ளடக்கியதான, 2025 ஜூலை 25 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 243ஆம் இலக்க பாராளுமன்ற வெளியீட்டுத் தொடரான அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் அறிக்கையானது, பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119(4) இன் ஏற்பாடுகளுக்கமைய சட்டத்துறை தலைமையதிபதியின் அவதானிப்புக்கள் மற்றும் தேவையான நடவடிக்கைகளுக்காக ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

*2.
பணம் தூய்தாக்கல் தடை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*3.
நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*4.
பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாய (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*5.
மத்தியஸ்தம் (குடியியல் மற்றும் வர்த்தகப் பிணக்குகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*6.

தொலைத்தொடர்பு அறவீடு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*7.

நிதி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*8.

தேசிய சூழல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*9.

இருப்பாட்சியாளர்களைப் பாதுகாத்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*10.

வாடகை (நீக்கல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*11.

தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2025 செப்தெம்பர் 24) [1].

*12.

பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சித்திரவதைக்கூடங்கள், சட்டரீதியற்ற தடுப்பு நிலையங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றை விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2025 ஏப்ரல் 10 ),— "2025 மார்ச் 14 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சித்திரவதைக்கூடங்கள், சட்டரீதியற்ற தடுப்பு நிலையங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றை விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கை பாராளுமன்றத்தினால் பரிசீலனை செய்யப்படுமாக." எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

13.

மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

14.

நிகழ்நிலைக் காப்புச்சட்டம் (இரத்துச் செய்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

15.

இலங்கை வசதிகள் முகாமைத்துவ நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

16.

காணி அபிவிருத்தி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

17.

கோதாகொட குணரதன நாஹிமி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* **அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

1.

2003/2026

கௌரவ ரவி கருணாநாயக்க,— வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் 2025 டிசம்பர் 31 வரை நிர்மாணிக்கப்பட்டு ஒதுக்கப்பட்ட மொத்த வீடுகளின் எண்ணிக்கை கொழும்பு மாநகர சபையெல்லைக்குள்ளும் மற்றும் நாடு தழுவிய ரீதியிலும் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட பயனாளர்களில் சட்டபூர்வமாக நிறைவேற்றப்பட்ட மற்றும் பதிவு செய்யக்கூடிய அறுதியுறுதிப்பத்திரங்கள் அல்லது உரிமை மாற்றும் ஆவணங்கள் இதுவரை வழங்கப்படாதவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) அத்தகைய பயனாளிகளின் எண்ணிக்கை கருத்திட்ட வாரியாகவும் ஒவ்வொரு மாவட்ட வாரியாகவும் வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) உறுதிப்பத்திரங்களை வழங்குவதைத் தடுக்கும் துல்லியமான சட்டக் குறைபாடுகள், நில அளவைக் குறைபாடுகள், காணி சுவீகரிப்பு அல்லது ஆவணக் குறைபாடுகள் யாவை என்பதையும்;

(v) கடந்த 03 ஆண்டுகளாக நிலுவையிலுள்ள கோப்புகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(vi) 2026 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிலுவையிலுள்ள உறுதிப்பத்திரங்களை வழங்குவதற்காக, மாதாந்த இலக்குகளை உள்ளடக்கிய காலவரையறையுடன் கூடிய வேலைத்திட்டம் ஏதேனும் உண்டா என்பதையும்;

(vii) குடிமக்களின் சொத்து உரிமைகளைப் பாதிக்கும் நீண்டகாலத் தாமதங்கள் தொடர்பில் எவரேனும் உத்தியோகத்தர் மீது அல்லது ஏதேனும் நிறுவனத்தின் மீது பொறுப்பு சுமத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

2004/2026

கௌரவ ரவி கருணாநாயக்க,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மகாவலித் திட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள மொத்த நீர் மின் உற்பத்தித் திறன் மற்றும் 2020 ஆம் ஆண்டு முதல் இன்று வரையிலான வருடாந்த உற்பத்தி யாதென்பதையும்;

(ii) அத்தகைய நீர் மின் வசதிகள் நிர்மாணிக்கப்பட்டு கையளிக்கப்பட்ட திகதி மற்றும் அவற்றின் நிர்மாணத்திற்கு அனுமதி வழங்கிய சனாதிபதி யார் என்பதையும்;

(iii) விக்டோரியா, ரன்தெனிகல மற்றும் கொத்மலை அணை உள்ளிட்ட பிரதான நீர்த்தேக்கங்களில் தற்பொழுது காணப்படும் மணல் படிவு மட்டங்கள் மற்றும் அவை நீர்த்தேக்கக் கொள்ளளவு மீது ஏற்படுத்தும் தாக்கம் யாதென்பதையும்;

(iv) கடந்த 05 ஆண்டுகளில் அணைகளின் பாதுகாப்பு மற்றும் புனரமைப்புப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதியின் அளவு யாதென்பதையும்;

(v) மாறிவரும் மழைவீழ்ச்சிக் கோலங்களின் கீழ், விவசாய நீர்ப்பாசனம், குடிநீர் வழங்கல் மற்றும் மின் உற்பத்தி ஆகியவற்றைச் சமநிலைப்படுத்த எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) நீர்ப்பாசன நம்பகத்தன்மை மற்றும் வெள்ள முகாமைத்துவத் திறன் குறித்துக் காலநிலை மீள்திறன் மதிப்பீடு ஏதேனும் நடத்தப்பட்டுள்ளதா என்பதையும் அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---